**வெலிகம நகர சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 09 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஜுன் 17 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து வெலிகம நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 237,126 தொகைக்கான இருப்பு மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காமையை சரி செய்யாமையின் காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 2,074,000 தொகை பெறுமதியான 02 வாகனங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | அடுத்த நிதிக் கூற்றுக்களில் பதிவேடுகளை இணக்கஞ் செய்து சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 158,649 தொகைக்கான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | மீளாய்வாண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு பரிந்துரை மீது ஏல விற்பனை செய்திருந்த ரூபா 475,438 தொகைக்கான நிலையான சொத்துக்களின் கிரயம் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிலையான சொத்துக்களின் கிரயம் ஏடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,712,790 தொகையான தாவர இருப்பினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு வீதி விளக்கு உபகரணங்களின் இருப்பு ரூபா 112,800 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vii) | மீளாய்வாண்டின் போது சபையினால் கொள்வனவு செய்திருந்த ரூபா 383,765 தொகை பெறுமதியான ஆயுர்வேத மருந்துகளின் இருப்பு நன்கொடை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமான உதவி வரவுத் தலைப்பு மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (viii) | மீளாய்வாண்டு தொடர்பாக பெறவேண்டிய ரூபா 116,875 இற்கான முதலீட்டு வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ix) | மீளாய்வாண்டிற்கான உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தவணைகள் செலுத்துதல் ரூபா 4,191,562 தொகை வருமான செலவுக் கணக்கிற்கு வரவு வைத்திருந்தமையால் ஆண்டிற்கான மிகை அதே பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (x) | மீளாய்வாண்டின் போது அடுத்த வருடத்திற்காக கிடைத்திருந்த ரூபா 915,914 இற்கான வாடகை, வருமான முற்பெறுவனவின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (xi) | சபைக்குச் சொந்தமான ரன்பொஹொனிய விற்பனை நிலையத்தின் தேறிய வருமானத்தை கணித்து வருமானம் மற்றும் செலவுக்கணக்கிற்கு சீராக்கல் செய்திருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 401,200 தொகைக்கான மீதி இருப்பு மீண்டுவரும் செலவுகளில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (xii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 1,906,309 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (xiii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மான வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 255,986 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (xiv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 8,916,577 இற்கான மீதிக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | உறுதியாக செலுத்தவேண்டிய செலவினை இனங் கண்டிருக்காமையால் இந்தக் கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத் தொகை ரூபா 173,578,226 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காணப்படும் மீதிகள் இடையே, கூட்டுத் தொகை ரூபா 15,284,710 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 133,454,690 தொகைக்கான 12 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்குமீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்குவதற்கு, மீதியை இனஞ்கண்டு தீர்ப்பதற்கு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்துவற்கு சான்றிதழ் பெற்று சரியாக சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 1646 | சபைக்குச் 14 சொந்தமான வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தற்போது உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. சாரதிகளுக்கு எழுத்து மூலம் அறிவித்த பின்னர் ஓட்ட அட்டவணைகள் முறைப்படி கிடைத்த வண்ணம் இருக்கின்றன. |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 34,205,597 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 50,148,678 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 மதிப்பீட்டு வருமானம் | 2019 சிட்டையிடப் பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப் பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 15,850,000 | 12,489,385 | 12,424,862 | 8,039,040 | 13,050,000 | 12,501,257 | 11,615,984 | 7,974,517 |
| வாடகை | 17,625,000 | 21,338,827 | 19,078,720 | 11,298,908 | 15,203,000 | 15,149,632 | 11,537,415 | 9,038,801 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 5,756,500 | 8,116,336 | 8,116,335 | 336,459 | 3,926,500 | 7,133,800 | 7,133,801 | 336,458 |
| ஏனைய வருமானங்கள் | 47,761,000 | 29,973,026 | 17,643,712 | 59,750,675 | 49,364,000 | 47,057,390 | 27,055,034 | 47,421,361 |
| மொத்தம் | 86,992,500 | 71,917,574 | 57,263,629 | 79,425,082 | 81,543,500 | 81,842,079 | 57,342,234 | 64,771,137 |

**2.2.2 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வீதவரி | | |
| மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 7,655,788 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 8,545,931 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகை கட்டணத்துடன் ரூபா 16,201,719 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 8,162,629 தொகை ஆகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 8,039,090 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. இந்த நிலுவை வீதவரி மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 4,907,260 இற்கான மீதிகள் அடங்கியிருந்தன. | நிலுவை வீதிவரி வருமானத்தை விரைவாக அறவிடப்பட வேண்டும். | வீதவரி அறவீடு செய்வதற்காக சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், ஆதனங்களை தடைசெய்வதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| **(ஆ) களியாட்ட வரி** | | |
| ஆரம்ப மீதி ரூபா 318,748 தொகையாகக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 109,225 உடன் ரூபா 427,973 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 82,622 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 345,351 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை களியாட்ட வரி வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | களியாட்ட வரி அறவீடு செய்வதற்காக விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) கடை வாடகை**<br>ஆரம்ப நிலுவை ரூபா 5,701,508 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 8,388,953 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகை கட்டணத்துடன் ரூபா 14,090,461 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 6,253,627 தொகையாகக் காணப்பட்ட மையினால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 7,836,834 தொகையான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. இந்த நிலுவை கடைவாடகை மீதியில் 3 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 1,062,697 இற்கான மீதிகள் அடங்கியிருந்தன. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | விரைவாக சட்ட நடவடிக்கைக்காக சமர்பித்து நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) வாடகை**<br>ஆரம்ப நிலுவை ரூபா 2,627,512 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 6,439,138 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகை கட்டணத்துடன் ரூபா 9,066,650 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 5,594,577 தொகையாகக் காணப்பட்டமையினால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 3,472,073 தொகையான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. இந்த நிலுவைத் தொகையில் சபைக்கு சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் 23 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 862,886 இற்கான நிலுவைத் தொகையும் அடங்கியிருந்ததுடன் அது தொடர்பாக சபையினால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | விரைவாக சட்ட நடவடிக்கைக்காக சமர்பித்து நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை மீதி ரூபா 336,459 ஆக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடலுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 8,116,336 தொகையாக காணப்பட்டது. ஆண்டிற்காக சிட்டையிடல் அனைத்தும் அறவிடப்பட்டிருந்த போதிலும் நிலுவை மீதியில் இருந்து எதுவித தொகையும் அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை அனுமதிப்பத்திர கட்டணம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | நிலுவை அனுமதிப்பத்திர கட்டணத்தினை பெறுவதற்காக வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 136,101 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 59,614,574 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கண்டறியப்பட்டிருந்த 17 அங்கீகாரமற்ற நிர்மான வேலைகளில் 13 தொடர்பாக நகரசபை கட்டடச் சட்டத்தின் 74 மற்றும் 84 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அங்கீகாரமற்ற நிர்மான வேலைகளை இனங்கண்டு அவற்றை அகற்றுவதற்கு அல்லது சட்ட முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | | |
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் 37 மிகைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | ஆரம்ப மற்றும் ஏனைய பதவிகளில் காணப்படும் வெற்றி டங்களை நிரப்புவதற்காக நடவடி க்கை எடுத்திருந்ததுடன் சிரேஷ்ட மற்றும் இரண்டாம் நிலை பதவிகளில் வெற்றிடங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 18 வெளிக்கள வேலைகள் தொழிலாளர்கள் மற்றும் 62 சுகாதாரத் தொழிலாளர்களை மேற்பார்வை செய்வதற்காக சுகாதார நிருவாகி ஒருவர் மாத்திரம் ஈடுபடுத்தப் பட்டிருந்ததுடன் வேலை / வெளிக்கள நிருவாக பதவியில் காணப்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | வேலை / வெளிக்கள நிர்வாக பதவி வெற்றிடம் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபையின் வெளிக்கள வேலை தொழிலாளர்கள் 10 பேர் மற்றும் சுகாதாரத் தொழிலாளர்கள் 04 பேர்களு க்கு சபை நிதியத்திலிருந்து ரூபா 5,279,080 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் பதவிக்கான குறிக்கப்பட்ட கடமை சாட்டுதல் மேற்கொள்ளப்படாமல் சபையின் பல்வேறு கடமைகள் சாட்டப்பட்டிருந்தமையால் பொதுமக்கள் நலன்புரி, சுகாதார அலுவல்கள் மற்றும் பாதைகள் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தான நிலைமை காணப்பட்டது. மேலும் 09 சுகாதார தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். | சேர்க்கப்பட்ட பதவிகளுக்கான கடமை சாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சுகாதார மற்றும வெளிக்கள வேலை தொழிலாளர் 14 பேர் சேவையின் தேவைப்பாடு காரணமாக வேறு கடமைகளுக்காக இணைக்கப்பட்டிருந்ததுடன், கடமை அட்டவணை வழங்கப்பட்டுள்ளது. |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் தபசஅ/6/5/பொது மற்றும் 2010 திசெம்பர் 27 ஆம் திகதி சுற்றறிக்கையின் 05 ஆவது பிரிவின் பிரகாரம் கடை உரிமையாளர்களுடன் மேற்கொள் ளப்படும் உடன்படிக்கைகள் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 77 கடைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கடைகளின் உடன்படிக்கை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (ஆ) | மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட கடைகளின் பெறுமதி மதிப்பீட்டுத் தொகை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு திருத்தப்படாத 21 கடைகள் காணப்பட்டன. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கடைகளுக்கான பெறுமதி மதிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டிய பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்படாமையால் ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,370,602 தொகை 2007 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக காணப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையில் ரூபா 225,000 இற்கான தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 06 பர்சஸ்களைக் கொண்ட 03 காணிகள் மற்றும் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டிக்காத 02 காணிகளை அங்கீகாரம் இன்றி பயன்படுத்தல் தொடர்பாக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரமற்ற நிர்மான வேலைகளை பரிசோதனை செய்து முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்குச் சொந்தமான மூன்று காணிகள் அளவை செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய அனைத்து காணிகளையும் அளவை செய்து முற்கம்பி அடித்து பெயர் பலகை பொறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 3.4.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் அரச நிறுவனங்களுக்கு சொந்தமான 04 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்துடன் 2019 திசெம்பர் 31 திகதி வரை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களும் சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4.3 விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 01 ஏக்கர் 01 ரூட் 12 பர்சஸ் அளவான 03 காணிகள் மற்றும் எண்ணிக்கை குறிப்பிடப்படாத 02 காணிகள் பயன்தரு கருமங்களுக்காக ஈடுபடுத்தாமல் விளைவற்று காணப்பட்டன. | ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | காணிகளை அளவை செய்த பின்னர் பயன்தரு கருமங்களுக்காக பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பதுடன் அளவு குறிப்பிடப்படாத இரண்டு காணிகளை அளவை செய்த பின்னர் அந்த அளவுகளை பதிவு செய்வேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதி அளவில் சபைக்குச் சொந்தமான 10 கட்டடங்கள் விளைவற்று காணப்பட்டன. | ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | சில கட்டடங்களை மறுசீரமைப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு கட்டடங்களை மறுசீரமைப்பதற்காக தேவையான பண்டங்களும் பெறப்பட்டுள்ளன. கொரோனா தொற்றுநோய் காரணமாக அந்த வேலைகள் தாமதமாகியுள்ளன. |
| (இ) | திறைச்சேரி செயலாளரின் 2018 மார்ச் 19 ஆம் திகதிய சொத்துக்கள் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2018 பிரகாரம் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 03 வாகனங்களை மீளாய்வாண்டு இறுதி வரையில் அகற்றப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்த முடியாத வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அகற்றுவதற்கு தேவையான அங்கீகாரத்தை பெறுவதற்காக 2020 மார்ச் 02 திகதி உள்ளூராட்சி செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை உரிய முறைப் பிரகாரம் செயற்படுத்துவேன். |